# மே – 20 – தூய ஆவியார் பெருவிழா ஞாயிறு

## "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்"(யோவா:20:22)

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 2 : 1 - 11

பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்.திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடுமுழுவதும் ஒலித்தது.மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள்.அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது வானத்தின் கீழுள்ள அனைத்து நாடுகளிலுமிருந்தும் வந்திருந்த இறைப்பற்றுள்ள யூதமக்கள் எருசலேமில் தங்கியிருந்தனர்.அந்த ஒலியைக்கேட்டுக் கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்தமொழிகளில் அவர்கள் பேசக்கேட்டுக் குழப்பமடைந்தனர்.எல்லோரும் மலைத்துப்போய், "இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய்மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?" என வியந்தனர்.பார்த்தரும், மேதியரும், எலாமியரும், மெசப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றவர்களும்,பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேன் நகரையடுத்த லிபியாவின் பகுதிகளில் வாழும் மக்களும் உரோமையிலிருந்து வந்து தங்கியிருந்தவர்களும், யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும், அரேபியரும் ஆகிய நாம் நம்மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக்கேட்கிறோமே!"என்றனர்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

## இரண்டாம் வாசகம் : 1கொரிந்தியர் 12:3–7,12–13

சகோதர சகோதரிகளே! கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் "இயேசு சபிக்கப்பட்டவர்" எனச் சொல்லமாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டடவரன்றி வேறு எவரும் "இயேசுவே ஆண்டவர்" எனச் சொல்லமுடியாது. இதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.அருள்கொடைகள் பலவகையுண்டு ஆனால் தூய ஆவியார் ஒருவரே.திருத்தொண்டுகளும் பலவகையுண்டு ஆனால் ஆண்டவர் ஒருவரே.செயல்பாடுகள் பலவகையுண்டு. ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர்.பொதுநன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது .உடல் ஒன்றே உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். ஏனெனில், யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்.

## நற்செய்தி : யோவான் 20 : 19 - 23

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலைவேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லியபின் அவர் தம்கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்.இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார்.
இதைச் சொன்னபின் அவர் அவர்கள்மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார்.

**தியானம்:** இன்று தாய்த்திருச்சபை மாபெரும் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. சாதாரண, சாமானிய மனிதர்களை அசாதாரணமான மனிதர்களாக மாற்றி திருச்சபையின் பிறப்பிற்கு அடித்தளமிட்ட தூய ஆவியின் அருள்பொழிவை, பெந்தகோஸ்தே அனுபவத்தை இன்று நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். பெந்தகோஸ்து என்றால் ஐம்பதாம் நாள் என்று பொருள். யூதர்கள் கொண்டாடும் மிக முக்கியமான திருநாள்களில் ஒன்றான அறுவடையின் நன்றியின் திருவிழாவின் ஐம்பதாம் நாளை பெந்தகோஸ்து திருநாளாக கொண்டாடி மகிழ்வது வழக்கம். இந்த நன்றியின் திருவிழாவின் போது தூய ஆவியானவர் பொழியப்படுகின்றார். கடவுளைப் போற்றித் துதித்து, நன்றியால் நமது இதயங்களையும், எண்ணங்களையும் ஆண்டவர்பால் திருப்புகின்ற போது தூய ஆவியானவர் நம்மீது பொழியப்படுகின்றார். நான் இந்த உலகத்திலே உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்று சீடர்களுக்கு வாக்குறுதி கொடுத்த இயேசு அவருடைய வாக்குத்தத்தின் நிறைவாக தூய ஆவியை அருளுகின்றார். "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் உங்களோடு தங்கியிருக்கின்றார், உங்களுக்குள்ளும் இருக்கின்றார்" (யோவா 14:16-17) இந்த உலகத்தின் போராட்டங்கள் மத்தியில் நாம் தனியாக விட்டுவிடப்படவில்லை நம்மோடு நம்முடைய போராட்டங்களில் பங்குகொள்ள கடவுளின் ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார், நம்முடைய வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கின்றார் (உரோ.8:26). இந்த தூய ஆவியானவரே நாம் பெற்றுக் கொண்டுள்ள முதல் கொடை (உரோ.8:23). இயேசுவின் போதனை, அற்புத அடையாளங்கள், மாட்சிமையான செயல்பாடுகள் மேலும் இயேசுவின் உயிர்தெழுதல் கூட சீடர்களுடைய வாழ்க்கையில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை ஏனெனில் இயேசு உயிர்த்தார் என்பதை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள், அச்சமும் கலக்கமும் அவர்களை நான்கு சுவற்றுக்குள் முடக்கிப் போடுகின்றது. அஞ்சி நடுங்கி, கோழைகளாக வாழ்ந்த சீடர்களின் வாழ்விலே தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தியது தூய ஆவியின் வருகை. இயேசுவின் பெயரையே உச்சரிக்க அஞ்சியவர்கள் இயேசுவை எல்லோர் முன்னிலையிலும் அறிக்கையிடுகின்ற மனிதர்களாக மாறிப்போகின்றார்கள். இயேசுவுக்காய் தங்களுடைய உயிரையும் கொடுக்க முன்வருகின்றார்கள். இயேசுவின் வார்த்தைகளுக்கிணங்க "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (திப.1:8) என்பதை எண்பித்துக் காண்பிக்கின்றார்கள்.